ஸ்ரீ ஹரி :

பூஜ்யஸ்ரீ முரளீதர ஸ்வாமிகளின்

# மதுரமுரளி

தெய்வீக மாதப் பத்திரிகை



வேணு : 8 | செப்டம்பர் 2002 | கானம் : 2

www.madhuramurali.org



ஸ்ரீ ஹரி:
மாதுரிஸகீ ஸமேத ஸ்ரீ ப்ரேமிகவரதனின்
ஒன்பதாவது வருட ப்ரஹ்மோத்ஸவம்
30-8-02 முதல் 8-9-02 வரை







30-08-02 வெள்ளி மாலை
ஸ்ரீ வர்ணிஷா கலாலய
குழந்தைகள்
நாட்டிய அஞ்ஜலி



30-8-02 இரவு
நந்தோத்ஸவம்



30-8-02 இரவு
ஹம்ஸவாஹனம்

ஸ்ரீ ஹரி:

# பூஜ்யஸ்ரீ முரளீதர ஸ்வாமிகளின்

# மதுரமுரளி

வேணு : 8 செப்டம்பர் 2002 கானம் : 2

## விஷய ஸூசிகை


| | | பக்கம் |
|---|---|---|
| 1. | ஸ்ரீ ஸ்வாமிகளின் கீர்த்தனம் | 2 |
| 2. | மதுரமான மஹனீயர் - 82 | 3 |
| 3. | பக்தர்களின் கேள்விகளுக்கு ஸ்ரீ ஸ்வாமிகளின் பதில்கள் | 6 |
| 4. | வேத கதைகள் - 63 | 10 |
| 5. | எந்தரோ மஹானுபாவுலு - 53 | 12 |
| 6. | ஸனாதனப் புதிர் - பகுதி - 17 | 15 |
| 7. | பாலகர்களுக்கு ஒரு கதை - 57 | 18 |
| 8. | ப்ருந்தாவனமும், நந்தகுமாரனும் - 9 தொடர்ச்சி | 21 |
| 9. | தமிழக திருக்கோயில்களில் ஒரு கால பூஜை - 4 | 25 |
| 10. | ஸ்ரீ ஸ்வாமிகளின் ஸம்பாஷணைகளிலிருந்து - 84 | 29 |


यथा रात्रौ तमो गेहे दीपेनैव निवार्यते ।
एवं मन्नामगानेन कलिदोषं विनाशयेत् ॥

“எவ்வாறு இரவில் வீட்டிலுள்ள இருள், தீபத்தினாலேயே போக்கப்படுகிறதோ, அவ்வாறே எனது பகவத் நாமகீர்த்தனத்தினால் கலிதோஷம் நாசம் செய்யப்படும்.”

**- பகவான் கூறுவதாக ஸ்ரீ வைஷ்ணவஸம்ஹிதையில்**
**ஸ்ரீஸ்ரீ க்ருஷ்ணப்ரேமி ஸ்வாமிகள்**

ஸ்ரீ ஹரி:

# ஸ்ரீ ஸ்வாமிகளின் கீர்த்தனம்

ராகம் : ஸஹானா தாளம் : ஆதி

*பல்லவி*

***தருணம் இதை அறிந்து கருணை செய்ய***
***வேண்டும் கண்ணா (தருணம்)***

*சரணங்கள்*

***வருணன் நின்று பெய்தபொழுது***
***குன்றை எடுத்து காத்தாயன்றோ***
***பாஞ்சாலி அன்று அஞ்சலி செய்து அழுதபொழுது***
***அக்கணமே துகில்தந்து துயரம் தீர்த்தாயன்றோ***
***(தருணம்)***

***மழலை சொல் காக்க அழையாமலே சென்று***
***நரஹரியாய் வந்து நின்றாய் அன்றோ***
***கலபமும் கமலம் கொண்டு துதிசெய்ய***
***முதலையைக்கொன்று அபயம் அளித்தாயன்றோ***
***(தருணம்)***

***உத்தரை அன்று உனையே சரணடைய***
***சக்கரம்கொண்டு சிசுவை காத்தாயன்றோ***
***தக்க தருணத்தில் உற்றதுணை நமக்கு***
***முரளீதரன் ஸ்வாமி ப்ரேமிகவரதன் அன்றோ***
***(தருணம்)***

*நாமாவளி*

***ப்ரேமிகவரத கோவிந்த***
***ப்ரேமிகவரத கோபால |***

***ப்ரேமிகவரத பாஹிமாம்***
***ப்ரேமிகவரத ரக்ஷமாம் ||***

## மதுரமான ஞானியர் 82

ஸமீபத்தில் நடைபெற்ற உபந்யாஸத்தில் ஸ்ரீ ஸ்வாமிகள் விநயத்தைப் பற்றி சொன்ன சில விஷயங்கள் ஸ்வாரஸ்யமாக இருந்ததால் அதைத் தங்களுடன் பகிர்ந்துகொள்ள ஆசைப்பட்டு இங்கு எழுதுகிறேன்.—

''விநயம் என்ற ஒரு உயர்ந்த குணத்திற்குள் எல்லாவிதமான நற்குணங்களும் அடங்கும். அதுபோல், கர்வம் என்ற துர்குணத்திற்குள் எல்லா துர்குணங்களும் அடங்கும். ஒருவன் எவ்வளவுதான் நற்குணங்கள் உடையவனாக இருந்தாலும், விநயம் இல்லையென்றால் மற்ற நல்ல குணங்கள் எதுவும் எடுபடாமல் போய்விடும். ஒருவனிடம் எவ்வளவுதான் துர்குணங்கள் இருந்தாலும், விநயம் மட்டும் இருந்துவிட்டால் அவனை நல்லவனாக அது காண்பித்துவிடும்.

ஆதிசங்கரர், தனது ஷட்பதி என்னும் ஸ்தோத்திரத்தை ஆரம்பிக்கும்பொழுது ***''அவிநயம் அபநய விஷ்ணோ''*** என்கிறார். ''அவிநயம்'' என்றால் கர்வம் என்று பொருள். அவர் பகவானிடம் கர்வத்தைப் போக்குமாறு ப்ரார்த்திக்கிறார். ஏனென்றால், கர்வமில்லாமல் இருக்கும் பக்தர்களுக்குத்தான் பகவான் அருள்பாலிக்கிறார்.

பகவத்கீதையில், பகவான் க்ருஷ்ணன், அர்ஜுனனுக்கு உபதேசம் செய்யும்பொழுது, ***''தத்வித்தி ப்ரணிபாதேன பரிப்ரஸ்நேன ஸேவயா''*** என்று கூறுகிறார். அதாவது, ''தத்துவம் அறிந்தவர்கள் ஞானிகள். நீ அவர்களுக்கு விநயத்துடன் சேவை செய்து அவர்களிடம் உனது ஸந்தேகங்களை நிவர்த்தித்துக் கொள்!'' என்று கூறுகிறார். ராஜஸூய யாகத்தில், பகவான் ஸ்ரீக்ருஷ்ணனுக்கு முதலில் பூஜை செய்ய வேண்டும் என்று அனைவரும் அவரைத் தேடியபொழுது, அவர் வாசலில் நின்றுகொண்டு அங்கு வந்தவர்களுக்கெல்லாம் பாதபூஜை செய்துகொண்டிருந்தார்.

அம்பாள் மீது 'ஸௌந்தர்யலஹரி' என்ற பெயரில் நூறு ஸ்லோகங்களைப் பாடிய ஆதிசங்கரர், கடைசியில் தான் அம்பாளைப் பற்றிப் பாடியது எப்படி இருக்கிறது என்று குறிப்பிடும்பொழுது ஜலப்ரவாஹமான ஸமுத்திரத்திற்கே ஒரு சொட்டு நீரால் அர்க்யம் விடுவது எப்படியோ, நெருப்புப் பிழம்பான சூரியனுக்கு ஒரு கரண்டியின் பின்புறம் கற்பூரத்தை வைத்து ஆரதீ காண்பிப்பது எப்படியோ அவ்வாறு உள்ளது என்று விநயத்துடன் குறிப்பிடுகின்றார்.

ஒரு ஸமயம், காஞ்சி மஹாபெரியவாள் 'அஹங்காரமற்ற ஆச்சார்யாள்' என்று ஆதிசங்கரரைப் பற்றி மிகவும் விரிவாக உபந்யாஸம் செய்தார்கள். மஹாபெரியவாள் ஒரு ஸமயம், தமது அந்தரங்க பக்தர்களுடன் பேசிக்கொண்டிருந்தபொழுது, ''ஸந்யாஸிகளுக்கு ஆசைகளே இருக்கக்கூடாது என்பார்கள். ஆனால், எனக்கு ஒரு ஆசை இருக்கின்றதே!'' என்று கூறினார். பக்தர்கள் ''என்ன ஆசை?'' என்று கேட்க, ஸ்ரீ மஹாபெரியவாள், ''இப்படி ஒரு ஸந்யாஸி இருக்கிறேன் என்று உலகத்தில் எவருக்கும் தெரியவே கூடாது என்று ஆசைப்படுகிறேன்'' என்று மிகவும் விநயத்துடன் கூறினார்.

மேலும், பல வருடங்களுக்கு முன் ஒரு வாரப் பத்திரிகையைச் சேர்ந்தவர்கள் தீபாவளி மலர் வெளியிடும்பொழுது, ஸமுதாயத்தில் பல துறைகளில் ப்ரபலமாக அன்று இருந்த நபர்களிடம், ''உலகத்திலிருந்து நீங்கள் கற்றுக்கொண்ட பாடம் என்ன?' என்ற ஒரு கேள்வியைக்கேட்டு, அவர்களின் பதில்களையெல்லாம் ப்ரசுரித்தனர். மஹாபெரியவாளிடமும் வந்து அதே கேள்வியைக் கேட்டனர். அப்பொழுது ஸ்ரீ மஹாபெரியவாள் அவர்களிடம், ''உலகம் எனக்கு ப்ரதிக்ஷணமும் பாடம் கற்றுக்கொடுத்துக் கொண்டுதான் இருக்கின்றது. ஆனால், அதை கற்கும் பக்குவம்தான் எனக்கில்லை'' என்று மிகவும் அழகாக பதிலளித்தது அவரது விநயத்தைக் காண்பிக்கிறது. ஒரு ஸமயம், Paul Brunton என்ற ஒரு வெளிநாட்டவர் மஹாபெரியவாளிடம் தனக்கு ஏதாவது உபதேசம் செய்யவேண்டும் என்று வேண்ட, பெரியவாளும் மிகவும் அழகாக அவரிடம் "Be humble! You will find what you seek!" என்று உபதேசித்தார்.

வைஷ்ணவ ஸம்ப்ரதாய ஆச்சாரியரான ஸ்ரீராமானுஜர் தம்முடைய அவதார கார்யங்களையெல்லாம் முடித்துக்கொண்டு வைகுண்டம் கிளம்பும் தருவாயில் ஸ்ரீரங்கம் கோபுரத்தின் மேல் ஏறி நின்றார். கீழே பாகவதோத்தமர்கள், ஸந்யாஸிகள், வைஷ்ணவர்கள் என்று ஆயிரக்கணக்கான நபர்கள் கூடியிருந்தார்கள். அவர்களிடம் ஸ்ரீராமானுஜர், ''நான் உங்களையெல்லாம் பகவானுடைய கைங்கர்யத்தில் ஈடுபடுத்தும்பொழுது, கைங்கர்யம் செவ்வனே நடைபெற வேண்டும் என்பதை மட்டுமே கருத்தில் கொண்டு நீங்கள் வருத்தப்படும்படியாக நடந்திருக்கலாம்.

பாகவதோத்தமர்களாகிய உங்களில், ஒருவருடைய மனது வருத்தப்படும்படியாக நான் நடந்திருந்தால்கூட பகவான் எனக்கு வைகுண்டத்தில் இடமளிக்க மாட்டான். எனவே, என்னை மன்னிக்க வேண்டுகிறேன்'' என்று கூறி அனைவரையும் விழுந்து ஸேவித்தார் என்றால் அவரது விநயம் எத்தகையது என்று நமக்குப் புலனாகிறது.

நாம ஸித்தாந்தத்தை ஸ்தாபித்த ஸ்ரீ சைதன்ய மஹாப்ரபு ஒரு பக்தன் தன்னை புல்லைக் காட்டிலும் கேவலமாக நினைக்க வேண்டும் என்று கூறியதோடு மட்டுமல்லாமல், யாரைப் பார்த்தாலும் உடனே நமஸ்கரித்துவிடுவார். ரமண மஹரிஷிகள் அவர் அமர்ந்திருந்த Hallற்குள் அவரை தரிசிக்க யார் வந்தாலும் அவரை மானஸீகமாக நமஸ்கரிப்பதாகக் கூறியுள்ளார்.

திருவண்ணாமலையில் வாஸம் செய்த யோகிராம்சுரத்குமாரை ஆரம்ப காலங்களில் கர்வத்துடன் தரிசிக்க வந்த சிலர், ''அவரை நமஸ்கரிப்பதா? வேண்டாமா?'' என்று யோசித்துக்கொண்டிருப்பார்கள். அவர்கள் அவ்வாறு யோசிக்கும்பொழுதே யோகிராம்சுரத்குமார் அவர்கள் "What is in it? I will do pranams!'' என்று கூறி தன்னை தரிசிக்க வந்தவர்களை நமஸ்கரித்துவிடுவார்''.

(தொடரும்)

**– ஜயந்தி ஜானகிராமன்**

# பக்தர்களின் கேள்விகளுக்கு ஸ்ரீ ஸ்வாமிகளின் பதில்கள்

*கேள்வி : ஆதிசங்கரர் பரிவ்ராஜக ஸந்யாஸியாகத்தானே பாரதம் முழுவதும் ஸஞ்சாரம் செய்து வந்தார். ஸந்யாஸியான அவர் பிறகு, ஏன் மடங்களை ஸ்தாபனம் செய்தார்?*

பதில் : ஆதிசங்கரருடைய காலத்தில் பௌத்த மதம் ப்ரபலமாக இருந்தது. பௌத்தமதம் உலகம் முழுவதும் பரவ ஆரம்பித்தது. இதற்குக் காரணம் அவர்கள் ஸங்கங்களை ஸ்தாபித்து அதன் மூலம் ப்ரச்சாரம் செய்ததே ஆகும். ஆதிசங்கரரும் நம்முடைய ஸனாதன மதத்துடைய கொள்கைகள் நன்றாகப் பரவ வேண்டுமானால் நாமும் ஒரு அமைப்பை ஏற்படுத்தி, அதன்மூலம் ஸனாதன மதத்தை ப்ரச்சாரம் செய்தால் Effectiveஆக இருக்கும் என்பதனால்தான் ஆங்காங்கே மடங்களை ஸ்தாபித்து, ஸனாதன மதத்தின் ப்ரச்சாரம் நடக்க ஏற்பாடு செய்திருக்கவேண்டும்.

*கேள்வி : இன்றைய ஸமுதாயத்தில், எப்பொழுதும் இல்லாத அளவிற்கு சீர்கேடுகள் ஏற்படுவதற்கு காரணம் என்ன?*

பதில் : ஸமுதாயம் என்பது மனிதர்கள்தானே. இன்று தனிநபர் ஒழுக்கம் என்பதே கேள்விக் குறியாகி விட்டது. ஆகவே, ஸமுதாயமும் இப்படித்தான் இருக்கும். பொறுப்புள்ள பெற்றோர்கள் குழந்தைகளை வளர்க்கும்பொழுது மிகவும் பொறுப்புடன் வளர்ப்பார்கள். கண்ட புத்தகங்களை குழந்தைகள் படிப்பதை விரும்பமாட்டார்கள். அதுபோல் கண்ட காட்சிகளை குழந்தைகள் பார்ப்பதை விரும்பமாட்டார்கள். குழந்தைகளுக்கு தங்களது நடவடிக்கைகள் ஒரு முன்உதாரணமாக அமைய வேண்டும் என்று ஆசைப்பட்டு அதன்படி நடப்பார்கள். தங்களுடைய குழந்தை பரீட்சைக்கு படிக்கின்றான் என்றால் தாங்களும் பொறுப்புணர்ந்து அவனுக்கு எந்தத் தொந்தரவும் ஏற்படாமல் பார்த்துக்கொள்வார்கள். இவைகள் எல்லாம் வீட்டில் இருக்கும்வரைதானே!

ஸமூகத்தில் அந்த குழந்தையின் நிலை என்ன? மனதைக் கெட்ட விஷயங்களில் ஸுலபத்தில் ஈடுபடுத்தச் செய்யும் விஷயங்கள் இல்லாத புத்தகங்களே இல்லை எனக் கூறலாம். அது போன்ற விஷயங்கள் தொலைக்காட்சி, சினிமா, website ஆகியவற்றி லும் உள்ளன. காம விகாரத்தைத் தூண்டும் இவைகளை எல்லாம் அனுமதித்துவிட்டு மற்றொருபுறம் ''குழந்தைப் பெற்றுக் கொள்ளாதே'' என்று விளம்பரம் வேறு.

ஒருபுறம் வன்முறையைத் தூண்டும், அவற்றை நிகழ்த்திக் காட்டும் செய்திகள்– காட்சிகள். மறுபுறம், வன்முறைக்கு எதிரான ப்ரச்சாரம். மனதில் பீதியை உண்டாக்கும் பல செய்திகள் Sensational ஆக இருப்பதால் பிரசுரிக்கப்படுகின்றது. இவற்றைப் படிப்பவர்கள் வாழ்க்கையில் பிடிப்பை இழந்து மனநிலை பாதிக்கப்பட்டவர்களாக ஆகிவிடுவார்கள். மனிதனுடைய மனம் சலனமுடையது. அது தறிகெட்டுப் போகாமல் பார்த்துக்கொள்வது அரசாங்கத்தின் பொறுப்பு. இப்பொழுதுள்ள நிலையில் மனிதன் சாஸ்திரங்களுக்கும் கட்டுப்படுவதில்லை. அரசாங்க சட்ட திட்டங்களுக்கும் கட்டுப்படுவதில்லை. அந்தக் காலத்தில் மீண்டும் மீண்டும் ராமாயணம், பாரதம் போன்ற கதைகளைச் சொல்லி வந்ததன் காரணம் என்ன தெரியுமா? அவற்றையெல்லாம் மீண்டும் மீண்டும் கேட்டால்தான், எத்தனை கஷ்டம் வந்தாலும், பொய் பேசக் கூடாது, தர்மத்திலிருந்து விலகக்கூடாது என்றெல்லாம் கேட்பவர்களுக்குத் தோன்றும். அதனால் ஸமுதாயமும் ஒழுங்காக இருக்கும். இன்றைக்கு உள்ள காலத்தின் சூழ்நிலைதான் இந்த சீர்கேட்டிற்குக் காரணம்.

*கேள்வி : இன்றைய காலகட்டத்தில் ஸமுதாயமே சீர்குலைந்திருப்பதைப் பார்க்கின்றோம். இதற்கு ஸந்யாசிகளும் விதிவிலக்கல்லவே! அவர்களுடைய தோஷத்தை மட்டும் குறைகூறி பேச வேண்டிய அவச்யம் என்ன?*

பதில் : ப்ரஹ்மச்சாரி, க்ருஹஸ்தன், வானப்ரஸ்தன் போன்ற ஆஶ்ரமங்கள் ஒருவன் அவசியம் மேற்கொள்ள வேண்டிய

ஆஶ்ரமங்களாகும். அவை தவிர்க்கமுடியாதவை. ஆனால், ஸந்யாஸ ஆஶ்ரமம் என்பது ஒருவன் எடுத்துக்கொண்டுதான் ஆக வேண்டும் என்று நிர்பந்தம் இல்லை. ஒருவனுக்கு உயர்ந்த பக்குவம் இருந்தால் மட்டுமே, தகுந்த குருவைக்கொண்டு தன் சுய விருப்பத்தின் பேரில் எடுத்துக்கொள்ள வேண்டியது. ஆகவேதான், அந்த ஆஶ்ரமத்தை எடுத்துக்கொண்டு அதன்படி நடக்கவில்லை என்றால் எல்லோரும் அவர்களை குறைகூறிப் பேசுகின்றனர்.

*கேள்வி : இன்று ஸாதுக்கள், ஸன்யாசிகள் இவர்களில் அநேகம் பேர் போலியானவர்கள் இருப்பதால், ஸாதுக்கள் ஸன்யாஸிகள் இவர்கள் வேண்டாம் என்று கூறிவிடலாமே?*

பதில் : இதே கேள்வியைத்தான் திருவண்ணாமலை யோகிராம்சுரத்குமார் அவர்களிடம் சிலர் கேட்டார்கள். அதற்கு அவர் ''காவல்துறையில் சிலர் தவறு செய்பவர்களாக உள்ளனர். இதனால் காவல்துறையே வேண்டாம் என்று சொன்னால் உலகின் நிலை என்ன ஆகும்?'' என்று பதில் கேள்வி கேட்டார்.

*கேள்வி : ஒருவர் ஸத்ஸங்கத்திலே இருந்துகொண்டு கீர்த்தனம், நாமஜபம், பாராயணம் எல்லாம் செய்துகொண்டிருக்கின்றார். நல்ல குருவையே ஆஶ்ரயித்தும் உள்ளார். ஆனால், பல தகாத செயல்களும் செய்கின்றார். பிறருடைய மனது புண்படும்படியும் பேசுகின்றார். இவருக்கு மோக்ஷம் கிடைக்குமா?*

பதில் : பாவம் செய்தவர்கள் யாராக இருந்தாலும் அதற்கான தண்டனையை அனுபவித்தே ஆக வேண்டும். பத்ராசலம் ராமதாஸர் உயர்ந்த ராமபக்தராக இருந்தபோதிலும் கூட அரசாங்கப் பணத்தை எடுத்துக் கோவில் கட்டியதற்கான ராஜ தண்டனையை அனுபவிக்கும்படியாகத்தான் ராமர் அவரை வைத்தார். ஆனால், இந்த பிறவிக்குள்ளாகவே அவர்கள் செய்த பாவத்திற்கான தண்டனைகளையெல்லாம் கொடுத்து அனுபவிக்கச் செய்துவிட்டு மோக்ஷத்தையும் கொடுத்துவிடுவான். அவர்களுடைய தோஷங்களை நாம் ஸ்மரிக்கக்கூடாது. அப்படி நாம் ஸ்மரித்தால் அந்த பாவத்திலே ஒரு பங்கு நமக்கும் வந்துவிடும்.

*கேள்வி : ராமாயணத்தில் லக்ஷ்மண ஆழ்வாரும், ஸ்ரீமத் பாகவதத்தில் பலராமரும் ஆதிசேஷனுடைய அவதாரங்கள்தானே! அப்படி இருக்கையில் பலராமரை மட்டும் எப்படி பகவானுடைய தசாவதாரங்களில் ஒரு அவதாரமாக சேர்த்துக்கொள்கின்றார்கள்?*

பதில் : அவதாரங்கள், பூர்ண - அம்ச - அம்சாம்ச - கலாம்ச - சக்தியம்ச - ஆவேச என்று பலவிதமாக விளக்கப்பட்டுள்ளன. பலராமர் - அம்சாவதாரம். லக்ஷ்மணர் - அம்சாம்சாவதாரம். பலராமர் - ஸங்கர்ஷணமூர்த்தியின் அவதாரம். லக்ஷ்மணர் - ஸங்கர்ஷணாம்சமான சேஷனின் அவதாரம். தனியாகவே துஷ்டநிக்ரஹ ஸாதுபரித்ராணம் முதலிய கார்யங்கள் பலராமருக்கு சொல்லப்பட்டுள்ளது. இளையபெருமாள் ஸ்ரீராமபிரானுடன் சேர்ந்தே பகவத்கைங்கர்ய ரூப தர்மத்தில் **दास्यमुपागतः** என்றிருப்பவர். லக்ஷ்மணர் இந்த்ரஜித்வதம் முதலிய துஷ்டவதங்களை ராமஸேவாரூபமாக செய்தார். பலராமர் அவதாரமாக இருப்பதாலேயே அவருக்கு தனியே பாஞ்சராத்ராதி விதானங்களில் பூஜைகள் கூறப்பட்டுள்ளன. இவ்விஷயங்கள் **श्री भगवत्सन्दर्भ** என்ற ஜீவ கோஸ்வாமியின் க்ரந்தத்தில் உள்ளது. எனவேதான் பலராமரை மட்டும் தசாவதாரங்களில் ஒரு அவதாரமாக சேர்த்துக் கொள்கிறோம்,

---

ஸ்ரீ ஹரி:

## பூஜ்யஸ்ரீ முரளீதர ஸ்வாமிகளின் சைதன்ய மஹாப்ரபு நாமபிக்ஷா கேந்த்ரா

ஸ்ரீ ஸ்வாமிகளின் ஆஜ்ஞைபடி நமது ஆஶ்ரமம் அமைந்துள்ள மதுரபுரி க்ஷேத்ரம், மஹாரண்யம் அருகிலுள்ள கீழ்க்கண்ட கிராமங்களில் காலை 10 மணி முதல் மாலை 4 மணி வரை கிராமத்து ஜனங்களால் ''ஹரே ராம.....'' அகண்ட நாமஸங்கீர்த்தனம் நடைபெற்றது.

4-8-02 - கொளத்தூர் 11-8-02 - மலைப்பட்டு

18-8-02 - கலட்டிபேட்டை

# வேத கதைகள் - 63

- தர்மஜ்ஞர், வாங்முக ஸார்வபௌம, மேலக்காவேரி
ப்ரஹ்மஸ்ரீ பஞ்சாபகேஸ ஸாஸ்த்ரிகள்

## ஆதித்ய க்ரஹம் சரணாகதி தத்வம்

சமக ப்ரஶ்னத்தில் (அகும்சுஸ்சமே) என்ற அனுவாகத்தில் (ஹாரியோஜனஸ்சமே) வரையில், பல க்ரஹங்கள் கூறப்பட்டுள்ளன. க்ரஹம் என்பது சிறிய உரல் போன்ற மரப்பாத்திரம் போன்றது. அதில் ஸோம ரஸத்தைப் பிழிந்து ஹோமம் செய்வார்கள். இதற்கு க்ரஹ ஹோமம் என்று பெயர். இதில் ஆதித்ய க்ரஹம் என்று ஒரு க்ரஹம். அதிதியின் பிள்ளைக்கு ஆதித்யாகன் என்று பெயர். ஒரு ஸமயம் அதிதியானவள்; பிள்ளைகளை விரும்பி ஸாத்யர்கள் என்ற தேவர்களின் பொருட்டு ப்ரும்மௌதனம் என்ற அன்னத்தை பாகம் செய்தாள். அந்த அன்னத்தில் ஒரு பாகத்தை ஸாத்யர்களுக்கு ஹோமம் செய்தாள். ஸாத்யர்கள் அதை ஏற்றுக்கொண்டு மீதியை அவளுக்கு அளித்தனர். அதை அவள் ஸ்வீகரித்தாள். அதனால் அவளுக்கு நான்கு பிள்ளைகள் பிறந்தனர். அதிதியின் பிள்ளையான அவர்களுக்கு ஆதித்யர்கள் என்று பெயர் ஏற்பட்டது.

மறுபடியும் முறையாக ப்ரும்மௌதனம் தயாரித்தாள். அப்பொழுது அவளுக்கு ஒரு எண்ணம் தோன்றியது. ஸாத்யர்களுக்கு அளித்த மீதியை உண்டதாலேயே நல்ல வீர்யமுள்ள நான்கு பிள்ளைகள் எனக்கு பிறந்தனர். அவர்களுக்கு அளிக்காமல் இந்த ப்ரும்மௌதனத்தை நானே உட்கொண்டால் எனக்கு மிகவும் வீர்யமுள்ள செல்வம் நிரம்பிய பிள்ளைகள் பிறப்பார்கள் என்று எண்ணி அவளே அருந்தினாள். அதனால் அவருக்கு ஒரு அண்டம் உண்டாயிற்று. இதனால் அவளுக்கு வருத்தம் ஏற்பட்டது.

பிறகு மூன்றாவது தடவையாக ப்ரும்மௌதனம் தயாரித்தாள். இந்த தடவை, எந்த பிள்ளை பிறக்கிறதோ அவன், முன் தோன்றிய நான்கு பிள்ளைகளுக்கு மேற்பட்ட பலமுள்ளவனாகவும் செல்வம் நிரம்பியவனாகவும் நம்மை பாதுகாப்பவனாகவும் இருக்கட்டும் என்று எண்ணினாள். அந்த ஸமயம், ஸாத்யர்களுக்கு

ப்ரும்மௌதனத்தை அளித்து தான் மீதியை உண்டதால் விவஸ்வான் என்ற பிள்ளை பிறந்தான்.

தேவர்கள் ஒரு ஸமயம் யாகம் செய்யும்பொழுது ருத்ரனை யாகத்திலிருந்து விலக்கினர். அந்த ருத்ரன் அதிதியின் பிள்ளையான ஆதித்யர்களை ஆக்ரமித்தார். ருத்ரனிடமிருந்து பயந்த ஆதித்யர்கள், இந்த்ர வாயு, மித்ரா வருணன், என்று இரட்டையாக உள்ள தேவர்களை சரணம் அடைந்தார்கள். அவர்களும் ஆதித்யர்களை ருத்ரனுக்கு காட்டிக் கொடுக்காமல் பாதுகாத்தனர். அதனால்தான், கொல்லக் கூடியவனாக இருந்தாலும் சரணாகதி செய்பவனை பாதுகாத்தே தீரவேண்டும் என்பது விதி. த்விதேவத்யர்கள் ஆதித்யர்களை பாதுகாத்ததால் த்வீ தேவத்ய க்ரஹங்களில் மிச்சம் உள்ள ஸோம ரஸத்தை ஆதித்யர்களுக்கு க்ரஹிக்கவேண்டும். இதுதான் ஆதித்ய க்ரஹத்தின் வரலாறு.

ராமாயணத்தில் விபீஷண சரணாகதி ப்ரகரணத்தில் சரணாகதி செய்தவனை பாதுகாக்க வேண்டும் என்பதற்கு ஸ்ருதி ஸ்ம்ருதி ஆசாரம் என்று மூன்று ப்ரமாணங்களை ராமன் காட்டியுள்ளார். இதில் ஸ்ருதி ப்ரமாணம் இந்த வேதபாகத்திலிருந்து கிடைக்கிறது.

Visit us at www.madhuramurali.org for

1. Detailed photographic reports of major mission / satsang events viz. Utsavams, Samprokshanams, Thirthayatras, Bhagavatha Sapthaham.
2. Online Spiritual magazine "Madhura Murali" every month in English / Tamil.
3. Satsang news & updates on mission activities.
4. Sri Swamigal's lectures / essays / sayings / kirtans
5. Articles on religion, philosophy, lives of saints.
6. Downloadable free audio "Hare Rama............" Mahamantra chanting rendered in various raagas & Video footage.

# எந்தரோ மஹானுபாவுலு - 53

நித்யானந்தரும் ஹரிதாஸரும், ஜகாயி, மதாயி வசிக்கும் இடத்திற்கு வந்தார்கள். ஜகாயி மதாயியுடன் சில சகாக்களும் இருந்தனர். இரு ஸந்யாசிகளும் பயமின்றி பாடிக்கொண்டு வரும் ஸமயம் ஜகாயி மதாயி இருவரும் குடிபோதையில் களைப்புற்று கட்டிலில் அமர்ந்து இருந்தனர். சிவந்த கண்களுடன் அவர்கள் தங்கள் முன் வந்து பாடும் ஸந்யாசிகளிடம், ''நீங்கள் யார்? உங்களுக்கு என்ன வேண்டும்?'' என்று கேட்டனர்.

நித்யானந்தர் மதுரமாக,

*''க்ருஷ்ண கஹோ க்ருஷ்ணநஜோ லேஹுக்ருஷ்ணநாம ।*
*க்ருஷ்ணமாதா க்ருஷ்ணபிதா க்ருஷ்ணதனப்ராண ॥*

என்று பாடிவிட்டு ''நாங்கள் பிக்ஷுக்கள், நாங்கள் பிக்ஷை கேட்டு வந்திருக்கிறோம். நீங்கள் உங்கள் வாயால்,

*''ஸ்ரீ க்ருஷ்ண கோவிந்த ஹரே முராரே ।*
*ஹே நாத நாராயண வாஸுதேவ ॥*

என்ற மதுரமான பகவன் நாமங்களை உச்சரியுங்கள். இதுதான் நீங்கள் எங்களுக்கு அளிக்க வேண்டிய பிக்ஷை, என்றார்.

இதைக் கேட்டதும், ஜகாயி, மதாயி இருவரும் கோபத்தால் சிவந்து தங்கள் இருக்கையிலிருந்து எழுந்து அவர்கள் மீது பாய ஆரம்பித்து, ''யாரடா அங்கே, இந்த முட்டாள்களை பிடித்துக் கட்டுங்கள்'' என ஆணை இட்டனர். நித்யானந்தர் உடனே ஓட்டம் பிடித்தார். ஹரிதாஸரும் தனது ஸ்தூல சரீரத்துடன் பெருமூச்சு விட்டுக்கொண்டே பின்னே ஓட ஆரம்பித்தார். வேலையாட்களும் இந்த முரடர்கள் குடிவெறியில் ஏதோ உளறுகிறார்கள்; பாவம் ஸாதுக்கள், அவர்களைப் பிடித்து நமக்கு என்ன ஆகப்போகிறது என்று சிறிது தூரம் ஓடிவிட்டு திரும்பிவிட்டனர்.

ஹரிதாஸர் பாவம், அடிக்கடி திரும்பிப் பார்த்துக்கொண்டே வந்தார். மிகவும் களைத்துப் போய் நித்யானந்தரிடம், ''இதோ பாருங்கள். எனக்கு வலி உயிர் போகிறது. என் கையை இப்படி

அழுத்திப் பிடித்துக்கொண்டு ஓடுகிறீர்கள்! யாரும் பின்னே துரத்தவில்லை. என் ப்ராணன் போய்விடும் போல் இருக்கிறது. என்னை விட்டுவிடுங்கள்'' என்றார்.

நித்யானந்தர், ''இதோ அடுத்த குளம் வரை ஓடுவோம்'' என்றார். ஹரிதாஸரோ, இனி முடியாது என கீழே விழுந்தார். ''உங்களது சஞ்சல ஸ்வபாவம் தாங்க முடியாமல் இருக்கிறது'' என்று ஹரிதாஸர் சொல்ல இருவரும் ப்ரேமை கலந்த சண்டையுடன் ப்ரபுவை வந்தடைந்தனர். மஹாப்ரபு இருவரையும் ப்ரஸன்னமாக வரவேற்று, ''இதோ நமது ப்ரசார மண்டலத்து முக்கியர்கள் வந்துவிட்டனர். எல்லோரும் இவர்களது நாம ப்ரசார வ்ருத்தாந்தங்களை கேளுங்கள்'' என்றார். ஹரிதாஸர் உடனே, ''ப்ரபோ! ஸ்ரீபாத நித்யானந்தர் மிகவும் சஞ்சலமாக இருக்கிறார். கொஞ்சம் இந்த குணத்தைக் குறைத்துக்கொள்ள வேண்டும் என்று நீங்களும் இவருக்கு புத்திமதி கூற வேண்டும்'' என்று கேட்டுக்கொண்டார்.

ப்ரபு, ''ஏன்! ஏன்! என்ன ஆயிற்று? ஏன் இருவரும் இப்படிக் களைத்து உள்ளீர்கள்? கூறுங்கள்?'' என்று கேட்டதும் ஹரிதாஸர், ''நான் என்ன கூறியும் நித்யானந்தர் கேட்காமல் அந்த இரு முரடர்களிடம் நாம ப்ரசாரம் செய்துவிட்டு அவர்கள் கோபித்துக்கொண்டதும் சிறு பையனைப் போல் ஓடி வந்து விட்டார். இனி எங்குமே நாம ப்ரசாரம் செய்யவிடாமல் அந்த முரடர்கள் நம்மை ஹிம்ஸிக்கப் போகிறார்கள்'' என்றார். இதைக் கேட்டதும் மஹாப்ரபு சிரித்துக் கொண்டே நித்யானந்தரிடம், ''ஸ்ரீபாத்! அவர்களிடம் ஏன் சென்றீர்கள்! இப்படி குறும்பு செய்யலாமா? இதனால் என்ன ப்ரயோஜனம்?'' என்றார்.

உடனே நித்யானந்தர் கல்பித்துக்கொண்ட ப்ரேமை கலந்த கோபத்துடன், ''இப்படி நீங்கள் என்னிடம் வேலை வாங்கக்கூடாது. நீங்கள் வீட்டிற்குள் உட்கார்ந்துகொண்டிருக்கிறீர்கள். நகர ப்ரசாரத்தின் சிரமங்களைப் பற்றி உங்களுக்கு என்ன தெரியும்? ஒருபுரம் எல்லோருக்கும் நாமப்ரசாரம் செய் என்கிறீர்கள். ப்ராஹ்மணனோ, சண்டாளனோ, பாபியோ, புண்யாத்மாவோ எல்லோருக்கும் பகவன் நாமாவை ப்ரசாரம் செய் என்று சொல்லிவிட்டு, இப்பொழுது

அவர்களிடம் ஏன் சென்றாய் என்று கேட்கிறீர்களே! அவர்கள்தான் எல்லோரையும் விட பெரிய அதிகாரிகள். நான் பிறந்ததிலிருந்தே எல்லாவற்றையும் துறந்து பிச்சை எடுத்து வாழ்கிறேன். என்னை உத்தாரணம் செய்ததில் உங்களுக்கென்ன பெருமை? உங்களுடைய பதிதபாவன நாமம் இப்பேர்ப்பட்ட பாபிகளை உத்தாரணம் செய்வதால்தான் அர்த்தமுள்ளதாக ஆகிறது. இப்படி வீட்டிற்குள் உட்கார்ந்துகொண்டால் வேலை நடக்காது. இப்படிப்பட்ட கோரமான பாவிகளை ஹரிநாமத்தின் சரணத்தில் கொண்டு வந்து பக்தனாக்காவிட்டால் லோகத்தில் ஹரிநாமத்தின் பெருமையை யார் தெரிந்துகொள்வார்கள்? என்று கேட்டார்.

மஹாப்ரபு சிரித்துக்கொண்டே ''ஸ்ரீபாத், நீங்கள் உத்தாரணம் செய்ய வேண்டும் என்று மிகவும் கவலைப்பட்டு கேட்டுக் கொள்ளக்கூடிய அப்பேர்ப்பட்ட பாகவத புருஷர்கள் யார்'' என்று வினவினார்.

அருகில் இருந்த ஸ்ரீவாஸ், கங்காதாஸ் இருவரும், ''ப்ரபோ! அவர்கள் பாகவதர்கள் இல்லை. இருவரும் ப்ராஹ்மண குலத்தில் உதித்த முட்கள். க்ரூரமான ராக்ஷஸகுணங்கள் பொருந்தியவர்கள்'' என்று கூறி ஜகாயி, மதாயி இருவருடைய க்ரூர நடத்தையைப் பற்றி விவரமாக எடுத்துக் கூறினர்.

மஹாப்ரபு மறுபடியும் சிரித்துக்கொண்டே, ''இனி எத்தனை நாட்கள் அவர்கள் அநியாயம் செய்ய முடியும். ஸ்ரீபாத் யாருக்கு தர்சனம் தந்து, மனதில் யாருடைய உத்தாரணத்தைப் பற்றி நினைக்கிறாரோ அவர்கள் இனி எப்படி பாபியாக இருப்பார்கள்? எப்பேர்ப்பட்ட பாபியும் ஸ்ரீபாத் நினைத்தால் பக்தனாக மாற மாட்டானா என்ன?'' என்றார். மஹாத்மாக்களுக்கு ஹ்ருதயத்தில் ஸ்வபாவமாக தயை பொங்குகிறது. அவர்களிடம் வந்து ப்ரார்த்தனை செய்துகொண்டால் தயை புரிவது ஒரு பக்கம் இருந்தாலும், தீனர்களிடமும் பாபிகளிடமும் அவர்களுக்கு காரணமின்றி தயை ஏற்பட்டாலும் போதும். அவர்கள் நல்ல கதியை அடைவார்கள். இனி ஜகாயி, மதாயி இருவரும் எப்படி மாறினார்கள் என பார்ப்போம். (தொடரும்)

**– ஜயந்தி ஜானகிராமன்**

# ஸனாதனப்புதிர் - பகுதி - 17

தொகுப்பு : **''ஆத்ரேயன்'',** சென்னை.

1. நரகாஸுரனுடைய தாய் தந்தையர் யார்?
2. நரகாஸுரனுடைய தலைநகரத்தின் பெயர் என்ன? அந்த தேசத்து தற்காலத்துப் பெயர் என்ன?
3. ஸ்ரீ க்ருஷ்ணன் நரகாஸுரனைக் கொல்ல எந்த ஆயுதத்தை உபயோகித்தார்?
4. நரகாஸுரனுடைய பிள்ளையின் பெயர் என்ன?
5. நரகாஸுரனால் சிறை பிடிக்கப்பட்டு, ஸ்ரீ கிருஷ்ணனால் விடுதலை செய்யப்பட்ட ராஜகன்னிகைகள் எத்தனை பேர். ஸ்ரீமத் பாகவதத்தில் கொடுக்கப்பட்ட எண்ணிக்கைக்கும் விஷ்ணு புராணத்தில் கொடுக்கப்பட்ட எண்ணிக்கைக்கும் என்ன வித்தியாசம்?
6. நரகாஸுரன் - வரம் வேண்டுதல் - தீபாவளி பண்டிகை இவைகள் பாகவதத்தில் காணப்படுகின்றனவா?
7. வஸுதேவர், தேவகி இவர்களின் முதல் ஆறு குழந்தைகள் பெயர் என்ன? இவர்கள் முந்தைய பிறவியில் யாருடைய குழந்தைகள்.
8. கம்ஸனால் கொல்லப்பட்ட இந்த ஆறு குழந்தைகளை வஸுதேவர் தேவகி யார் மூலம் எங்கிருந்து கொண்டு வரப்பட்டு சந்திக்கிறார்கள். இது பாகவதத்தில் எங்கு காணப்படுகிறது?
9. பாகவதத்தில் எட்டு ப்ரதான சித்திகள் கூறப்பட்டு இருக்கின்றன. அவைகள் யாவை?
10. ஸ்ரீமத் பாகவத புராணத்தின் கதைச்சுருக்கம் பாகவதத்தில் எங்கு சொல்லப்பட்டு இருக்கிறது?
11. ஸ்ரீமத் பாகவதத்தின் கடைசி ஸ்லோகம் - (18000வது ஸ்லோகம்) என்ன?

---

ஸனாதனப்புதிர் பகுதி 17-க்கான பதில்களை
செப்டம்பர் 25க்குள் அனுப்ப வேண்டும்.

## ஸனாதனப்புதிர் - பகுதி 16க்கான பதில்கள்

1. வஸுதேவர், தேவகி, மதுரா, கோகுலம், நந்தகோபர், யசோதை.
2. வஸுதேவர், தேவகி - ரோஹினி, (தேவகியின் கர்ப்பத்தை ரோஹினிக்கு யோகமாயையின் உதவி கொண்டு மாற்றப்பட்டது) ராமன், பலபத்ரன், ஸங்கர்ஷணன், ஹலாயுதன்.
3. 

| | | | | | |
|---|---|---|---|---|---|
| மானுட உருவில் | - | பூதனா | - | க்ருஷ்ணர் | |
| புழுதிப்புயல் | - | சுழல்காற்று | - | திருணாபர்த்தன் | - க்ருஷ்ணர் |
| கொக்கு உருவம் | - | பகன் | - | க்ருஷ்ணர் | |
| கன்று உருவம் | - | வத்ஸன் | - | க்ருஷ்ணர் | |
| மலைப்பாம்பு | - | அகன் | - | க்ருஷ்ணர் | |
| கழுதை | - | தேனுகன் | - | பலராமர் | |
| இடையர் சிறுவன் | - | ப்ரலம்பன் | - | பலராமர் | |
| குதிரை | - | கேசி | - | க்ருஷ்ணர் | |
| இடையர் சிறுவர் | - | யோமாசுரன் | - | க்ருஷ்ணர் | |
| காளைமாடு | - | அநிஷ்டன் | - | க்ருஷ்ணர் | |

4. நளகூபரன், மணிக்ரீவன்
   குபேரனுடைய புதல்வர்கள் - நாரதர் சாபத்தால்
5. ப்ருந்தாவனம் என்ற வ்ரஜபூமி. யமுனை நதிக்கரை,
   கோவர்த்தனமலை, செழிப்பான காட்டுப் பிரதேசம்.
6. ஏழு நாட்கள் - இந்திரனரின் கர்வத்தை அடக்க.
7. ஹேமந்த ருது. காத்யாயனி விரதம்.
8. குவலையாபீடம் - யானை - க்ருஷ்ணர்
   சாணூரன் - க்ருஷ்ணர்
   முஷ்டிகன் - பலராமர்.
9. கம்ஸன் - க்ருஷ்ணர்
   அவனது எட்டு தம்பிகள் - பலராமர்.
10. அவந்திபுரம் என்னும் உஜ்ஜயினியில் உள்ள ஸாந்தீபனி என்பவரிடம்.
    64 நாட்கள்.
11. (i) விதர்ப்ப தேசத்து அரசன் - பீஷ்மகனின் பெண் - ருக்மிணி
    (ii) சத்ராஜித்தின் பெண் சத்யபாமா.
    (iii) ஜாம்பவானின் பெண் - ஜாம்பவதி.
    (iv) சூர்யனின் பெண்ணான யமுனை என்ற காளிந்தீ.
    (v) அவந்தி தேசத்து அரசனான விந்தன் - அனுபிந்தன் தங்கை தனது அத்தை ராஜாதி தேவியின் மகளான - மித்ரவிந்தை
    (vi) கோசல நாட்டு அரசனான நக்னஜித்தின் புதல்வி - நாக்னஜிதி தேவி என்ற ஸத்யை - ஏழு முரட்டுக் காளைகளை அடக்கி மணம் புரிந்தான்.

(vii) கேகயராஜனான ஸந்தர்தனனின் சகோதரியான ஸ்ருதகீர்த்தி என்ற பத்ரை.

(viii) மத்ர தேசத்து லக்ஷ்மணை.

இதைத்தவிர நரகாஸுர வதத்திற்குப் பிறகு 16000 (பாகவதம் 10.59 - 33/34) என்று பாகவதமும் 16100 மனைவிகள் என்று விஷ்ணுபுராணம் கூறுகிறது - 16100 மனைவிகள் - மேலும் 8 பட்ட மகிஷிகள் - மொத்தம் 16108 மனைவிகள் - குழந்தைகள் 1,61,081 (161080 பிள்ளைகள், 1 பெண்)

ஆதாராம் - தசமஸ்கந்தம் - 61-வது அத்தியாயம் - ஸ்லோகம் 1, 7, மேலும் 19)

12. ஸூர்ய க்ரஹணத்தன்று சமந்த பஞ்சகம் என்னும் குருக்ஷேத்திரத்தில்

---

ஸனாதனப் புதிர் - பகுதி - 16க்கான சரியான பதில்களை அனுப்பி பரிசு பெற்றவர்கள் விவரம்

**முதல் பரிசு ரூ. 250/- (தலா ரூ. 125/-)**

1. M. Srivathsa Sarma, Madhurapuri Ashram, Mahanyam Village, Malaipattu S.O., Padappai - 601 301.
2. K.S. Subramanyan, 16/4, Dr. Ranga Road, Mylapore, Chennai - 600 004.

**இரண்டாம் பரிசு ரூ. 150/- (தலா ரூ. 75/-)**

1. Nirmala Giri, Madhuramurali Nagar, Mahanyam Main Road, Malaipattu S.O., Padappai - 601 301.
2. S. Santha, 35, Patel Street, Thenpathi, Sirkazhi - 609 111.

**மூன்றாம் பரிசு ரூ. 100/- (தலா ரூ. 35/-)**

1. S. Saranathan, 10/21, Ranganathan Street, Nehru Nagar, Chrompet, Chennai - 600 044.
2. K.A. Sivaramakrishnan, No. 77, Verma Layout, Thanisandra Main Road, Bangalore - 560 045.
3. N. Ramanathan, 11-4-322/32, Chilkalguda, Secundrabad - 500 062.

**சிறப்பு பரிசு ரூ. 100/- (தலா ரூ. 20/-)**

1. C. Krishnaswami, 23 (32), Jambulinga Naicka Street, Chennai - 34.
2. J. Bharat, A-37, Sunset Heights, Nangis Dutt Road, Pali Hik, Bandra (w), Mumbai - 400 050.
3. Bhuvana Narayan, F-302, Redwood, Reheja Residency Koram Angara, Bangalore - 560 034.
4. V. Ashudosh, 75, Kesava Smurudhi, 8-B, Veera Savankar Veedhi, Dadar, Mumbai - 400 028.
5. R. Balan, 3/100, Mangalor, VRPB Sule Marg, Wadala, Mumbai - 400 031.

# பாலகர்களுக்கு ஒரு கதை - 57

சென்ற நூற்றாண்டில் ரிஷிகேஶத்தில் வாழ்ந்து, Divine Life Society என்ற ஒரு ஆன்மீக ஸ்தாபனத்தை ஏற்படுத்திய ஸ்வாமி சிவாநந்தரின் சரித்திரத்தில் நடந்த ஒரு ஸம்பவத்தைப் பார்ப்போம்.

சிவானந்த ஆஶ்ரமத்தில், கோவிந்தன் என்ற ஒருவன் இருந்தான். அவன் மிகவும் துஷ்ட ஸ்வபாவம் உடையவன். ஆஶ்ரமத்தில் எவருக்கும் அடங்காமல், ஒரு வேலையும் செய்யாமல், எப்பொழுதும் யாருடனாவது சண்டை போட்டுக் கொண்டே இருப்பான். ஆஶ்ரமத்தைச் சேர்ந்தவர்கள் அவனைப் போன்ற ஒரு துஷ்டன் இருப்பது ஆஶ்ரமத்திற்கே ஆபத்து. எனவே அவனை வெளியேற்றிவிட வேண்டும் என்று பலமுறை ஸ்வாமி சிவானந்தரிடம் வேண்டினர். அப்பொழுதெல்லாம் அன்பே உருவான சிவானந்தரோ, ''நீங்கள் சொல்வதுபோல் அவன் அத்தகைய கொடியவன் என்றே வைத்துக்கொண்டாலும், அவனை வெளியே அனுப்பினால் வெளியுலகுக்குத் தான் சிரமம். மேலும், அவனை நல்வழிப்படுத்துவது எனது கடமையல்லவா? எனவே அவன் இங்கேயே இருக்கட்டும்!'' என்று கூறிவிடுவார்.

1950-ஆம் வருடம் ஜனவரி 8-ஆம் தேதி அன்றிரவு வழக்கம் போல் ஆஶ்ரமத்தில் ஸ்வாமி சிவானந்தர் முன்னிலையில் ஸத்ஸங்கம் நடைபெற்றுக்கொண்டிருந்தது. அங்கு கூடியிருந்த ஸ்வாமிகளின் சீடர்கள் அனைவரும் தன்னிலை மறந்து ஸத்ஸங்கத்தில் ஈடுபட்டிருந்தனர். அப்போது, திடீரென்று எங்கிருந்தோ சிவானந்தர்மேல் பாய்ந்த கோவிந்தன் ஒரு கோடாரியால் அவரைத் தாக்க முற்பட்டான். ஆனால் குறிதவறி கோடாரியின் பிடிமட்டும் ஸ்வாமிகளின் சிரசில் பட்டது.

அங்கிருந்த சீடர்கள் உடனே அவனை வளைத்துப் பிடித்து அடித்தனர். அப்பொழுது சிவாநந்தர், ''அவனை ஒன்றும் செய்யாதீர்கள்!'' என்று கூறி அவர்களைத் தடுத்தார். அந்த துஷ்டனைப் பார்த்து, ''உனக்கு திருப்தி ஏற்படும்வரை என்னை

அடி!'' என்று கூறி அப்படியே நின்றார். தனது சீடர்களை நோக்கி ஸ்வாமிகள் உணர்ச்சி பொங்க, ''அவனை தண்டிப்பதால் என்ன பயன்? அனைத்தும் பகவத்ஸங்கல்பத்தினாலேயே நடக்கிறது. நீங்கள் தினமும் ஸ்ரீருத்ர பாராயணம் செய்கிறீர்ளே; அதில் ''தஸ்கராணாம் பதயே நம:'' என்று சொல்லப்பட்டுள்ளதல்லவா? ''கள்வர்களின் தலைவனான பரமேஶ்வரனை நமஸ்கரிக்கிறேன்'' என்றுதானே அதன் பொருள். கள்வனிடமும், துஷ்டனிடமும், வஞ்சகனிடமும் கூட இறைவனையே காணவேண்டும்!'' என்று கூறி, தன்னை தாக்கிய அந்தக் கொடியவனை ஸாஷ்டாங்கமாக விழுந்து நமஸ்கரித்தார்.

இந்த ஸம்பவம் ஸாது வாழ்க்கையை மேற்கொண்டிருக்கும் நமக்கெல்லாம், நாம் உலகில் எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும் என்பதற்கு ஒரு படிப்பினை தருவதாக அமைந்துள்ளது.

---

ஒருவர் அத்வைத வேதாந்த தத்துவங்களை நன்றாக பேசுவதனால் மட்டுமோ, தனக்கு ஆத்ம ஸாக்ஷாத்காரம் ஏற்பட்டுவிட்டது என்று கூறுவதனால் மட்டுமோ அவரை ஞானி என்று ஏற்றுக்கொள்ள முடியாது. அவருடன் நன்றாகப் பழகிப் பார்த்தால்தான் அவருக்கு அத்தகைய ஞானம் ஸித்தித்துள்ளதா என்பது வெளிச்சமாகும்.

**- ஸ்ரீ ஸ்வாமிகள்**

---

நாம ஜபம் செய்யாதவனுடன் எந்த ஸம்பந்தமும் வைத்துக் கொள்ளாதே. அவன் வேத அத்யயனம் செய்திருந்தாலும் அவனை சிரார்த்தத்தில் ப்ராஹ்மணனாக வரிக்காதே. அவனுக்கு எந்த தானமும் செய்யாதே. அவன் ஸத்ப்ராஹ்மணன் கிடையாது. நாமஸங்கீர்த்தனம் செய்யாதவனுக்கு உன்னுடைய பெண்ணை கல்யாணம் செய்து கொடுக்காதே. மீறி செய்வாயானால் நீ குருத்ரோஹி.

**- பகவான்நாம போதேந்திர ஸ்வாமிகள்**

ஒரு ஸமயம், காஞ்சி மஹாபெரியவாள், ஸ்ரீ சந்திரசேகரேந்திர ஸரஸ்வதி ஸ்வாமிகளிடம் ஒரு பக்தை, தான் கண்ட ஒரு கனவைப் பற்றிக் கூறினாள். அந்த கனவில், ஸ்ரீ மஹா பெரியவாள் தன்னிடம் தங்கக் கிண்ணத்தில் முந்திரிப்பருப்பு நிறைய போட்டுத் தரும்படி கேட்டதாகக் கூறினாள். மேலும், அந்த பக்தை, தங்கக் கிண்ணம், முந்திரிப்பருப்பு ஆகியவற்றின் மதிப்பிற்கு சரியாக பணமாக ஸ்ரீ மஹாபெரியவாளிடம் தந்துவிடுவதாகக் கூறினாள். அதற்கு பெரியவாளோ, ''நீ உன் கனவை நிறைவேற்ற விரும்பினால் நான் எப்படிக் கேட்டேனோ அப்படியேதான் ஸமர்ப்பிக்க வேண்டும்'' என்றார்.

அந்த பக்தையும் ஒரு தங்கக் கிண்ணம் செய்து, அது நிறைய முந்திரிப்பருப்பு வைத்து ஸ்ரீ மஹாபெரியவாளிடம்ஸமர்ப்பித்தார். அப்பொழுதெல்லாம் தங்கத்தில் ஆபரணங்கள் தவிர மற்ற சாமான்கள் எதுவும் செய்யக்கூடாது, வைத்திருக்கவும்கூடாது என்ற சட்டம் இருந்தது. அந்தக் கிண்ணத்தைக் கையில் எடுத்த ஸ்ரீ மஹாபெரியவாள், முந்திரிப்பருப்பை மட்டும் தான் எடுத்து வைத்துக்கொண்டுவிட்டு, உடனே மடத்து மானேஜரை அழைத்து அந்தத் தங்கக் கிண்ணத்தை அரசாங்கத்திடம் ஒப்படைக்கச் சொல்லிவிட்டார்.

**- ஆ. பாக்யநாதன்**

ஒரு ஸ்த்ரீயானவள் வாய்விட்டு சப்தம் போட்டு புருஷர்களைப் போல் சிரிக்கக்கூடாது. அப்படி சிரித்தால் வாழ்க்கையில் பல துன்பங்களை சந்திக்க நேரிடும் என்று க்ருஷ்ணபரமாத்மா த்ரௌபதியிடம் புத்திமதி கூறியிருந்தார். அதைக்கேட்காமல் ராஜஸூய யாகத்திற்கு வந்திருந்த துரியோதனனைப் பார்த்து வாய்விட்டு ஸப்தம் போட்டு சிரித்ததே பிற்காலத்தில் பல துன்பங்களை த்ரௌபதி அனுபவித்ததற்கு காரணம்.

**- அம்மாளுஅம்மாள் கீர்த்தனையிலிருந்து**

# ப்ருந்தாவனமும் நந்தகுமாரனும் - 9

பாங்கேவிஹாரி தன்னிடம் வரும் வழியை தானாகவே இந்து பூஷணுக்கு காண்பித்துவிட்டான். நந்தகாவுக்கு வடக்கு திசையில்தான் பர்ஸானா உள்ளது. பர்ஸானா, நந்தலாலாவின் ஹ்லாதினி சக்தியும், ப்ரேம ஸ்வரூபிணியுமான ராதாராணியின் ஸ்தானம். நந்தலால் எல்லா விதத்திலும் ப்ரேமைக்கு அடிமை. ப்ரேமைக்கு அதிதேவதையான ராதாராணியின் க்ருபையைப் பெற்றால்தான் பாங்கேவிஹாரியின் கருணையைப் பெறமுடியும்.

இந்துபூஷணும், ''பூல்பாபா'' வ்ருஷபானு நந்தினியின் ஸ்மரணையை செய்துகொண்டு பர்ஸானாவை நோக்கி நடக்கலானார். ஸிம்ஹத்வாரத்தை அடையும்பொழுதே ஒருவர் ராதாராணியின் ப்ரஸாதத்தை ஒரு தட்டில் வைத்துக்கொண்டு அவருக்காக காத்திருந்தார். நந்தலால்தான் ஸ்ரீராதாராணியை இப்படி ஒரு ரூபத்துடன் இந்துபூஷணை எதிர்கொள்ள ப்ரேரணை செய்திருந்தான். ராதாராணியின் திவ்ய ப்ரஸாதத்தை ஏற்றுக்கொண்டு இந்துபூஷண் தனது வெகுநாளைய உண்ணாவிரதத்தை முடித்துக்கொண்டார். அவருக்குள், இந்த ப்ரஸாதத்தால் ஒரு புதிய சக்தியும் தெம்பும் ஏற்பட்டது.

கருணா மயியான ராதாராணியின் சரணத்தை அடைந்த உடனேயே அவள் தனது கருணை ஸமுத்ரத்தையே அவர் மீது பொங்கச் செய்தது போல் உணர்ந்தார். இந்த கருணையை நினைத்து நினைத்து இரவும் பகலும் பர்ஸானாவின் ஜனமற்ற ரம்யமான இடங்களிலெல்லாம் பஜனை செய்து வந்தார். எந்நேரமும் **பா**வ ஸமாதியிலேயே திளைத்தார். ராதாராணியே அவரது ஆகாரத் தேவைகளை கவனிக்கும்படி ஆயிற்று. யாரையாவது தூண்டிவிட்டு அவருக்கு ஆகாரம் வேளா வேளைக்கு அனுப்பி வைப்பாள். சில ஸமயம் தானே, ஒரு வ்ரஜ கன்னிகையைப் போல் உணவை எடுத்துக்கொண்டு வந்து தந்துவிட்டுச் செல்வாள்.

தனக்காக ராதாராணி இப்படி சிரமப்படுவதைப் பார்த்து பூல்பாபா மதுகரி வ்ருத்தி செய்யலானார். சில நாட்கள் கழித்து

அவருக்கு ராதாதேவியின் க்ருபையால் திடீரென்று பாங்கேவிஹாரியின் நினைவு வர, ராதாதேவியின் அனுக்ரஹத்தைப் பெற்றுக்கொண்டு ப்ருந்தாவனத்தை அடைந்தார்.

ப்ருந்தாவனத்தில் நிதிவனத்தில் நித்யம் ராஸோத்ஸவம் இன்றும் நடைபெறுகிறது. பாக்யமுள்ள பக்தர்களுக்கு அந்த தர்சனம் ஏற்படும். கண்ணன் ராஸம் செய்வதற்காக அங்கு பக்தர்கள் வனத்தை எந்நேரமும் சுத்தம் செய்து வைத்துக்கொண்டே இருப்பார்கள். இதை ஒரு ஸேவையாக நினைத்து அங்கே பெருக்கிக் கொண்டே இருப்பார்கள். இதற்கு ஸோஹனி ஸேவை என்று பெயர்.

பூல்பாபா தன்னை ராதாராணியின் ப்ரியஸகியாகவே **பா**வித்துக்கொள்வார். இதே **பா**வனையுடன் நிதிவனத்தில் ஸேவை செய்வார். பிறகு பாங்கேவிஹாரியின் கோவிலுக்கு புஷ்ப கைங்கர்யம் செய்வார். பாங்கேவிஹாரியின் அலங்காரத்திற்காக இங்கும் அங்கும் அலைந்து பூக்களைத் திருடிவருவார். எந்த வீட்டில் அழகான பூக்கள் மலர்ந்திருந்தாலும் அதை க்ருஷ்ணனுக்கென்று எண்ணி அந்த வீட்டிற்குள் எப்படியோ நுழைந்து பூக்களைப் பறித்து விடுவார்.

அவருடைய அபிப்ராயப்படி ப்ருந்தாவனத்தில் உள்ள எல்லா இடங்களும் பாங்கேவிஹாரிக்குத்தான் சொந்தம். அங்கு அனைத்து புஷ்பங்களும் அவனுக்காகத்தான் மலர்கின்றன. எனவே பூக்களைப் பறிப்பதில் என்ன தவறுள்ளது? பறித்து அவனுக்குத் தராவிட்டால்தான் தவறு என்பது அவரது **பா**வம். ஆனால், லோகத்திற்கு அவரது **பா**வம் புரியுமா? எல்லோரும் அவரை திட்டினர். திட்டுகளை அவர் பொருட்படுத்தமாட்டார். சில சமயம், அடியும் வாங்குவார். ஒரு தரம் அவரை பூக்களவிற்காக காவல் நிலையத்திலும் வைத்தனர். வெளியில் வந்ததும் மறுபடியும் அதே ஸேவையைத் தொடர்ந்து செய்தார். சேட் ஹர்குலால் என்பவர் பாபாவிற்கு பாங்கேவிஹாரிக்கு சொந்தமான தோட்டத்திலிருந்தே பூக்களைப் பறிக்க அனுமதி தந்தார். இதற்குப் பிறகு அவர் பூக்களை திருடுவதை நிறுத்தி விட்டார்.

ஒரு செயல் சுபமானதா, அசுபமானதா அந்த செய்கையில் பகவான் ப்ரசன்னமடைந்தானா அல்லது அப்ரஸன்னமானானா என்பதை அந்த செய்கையின் விளைவைக் கொண்டுதான் தெரிந்து கொள்ள வேண்டும். பூல்பாபாவின் புஷ்ப கைங்கர்யத்தால் அவருக்குக் கிடைத்த யுகள மூர்த்திகளின் க்ருபையும் அனுபவமும் தான் அவரது திருட்டினாலும் ப்ரபு ப்ரசன்னமடைந்தான் என்பதற்கு சாட்சி.

ராதைக்கும் க்ருஷ்ணனுக்கும் ஒரு பக்தன்மேல் க்ருபை ஏற்பட்டுவிட்டால் அவர்கள் யோகமாயையால் அந்த பக்தன் மூலமாக ஒரு லீலாவிசேஷம் ஏற்படுவதற்கான சூழ்நிலையை உண்டாக்குவார்கள். பூல்பாபா விஷயத்திலும் அப்படி நடந்தது. ஒரு நாள் நிதிவனத்தில் ராஸ ந்ருத்தியத்தின்பொழுது நடனம் செய்து கொண்டிருந்த ராதாதேவியின் நூபுரம் கழன்று விழுந்தது. ஸகிகள் ராதாராணியை நிறுத்தி திருப்பி அந்த நூபுரத்தை அணிவித்தனர். நடனம் முடிந்ததும் ராதாதேவி தனது நூபுரங்களை எண்ணுகையில் ஒன்று குறைவதைக் கண்டு தோழிகளைத் தேடுமாறு பணித்தாள். எத்தனை தேடியும் அவர்களுக்கு அது கிட்டவில்லை.

அடுத்த நாள் காலையில் ராஸ நடனம் ஆரம்பிக்கும்முன் ராதாராணி ஸகிகளிடம், ''காலையில் பூல்ஸகி நிதிவனத்தில் ஸோஹனி ஸேவா செய்ய வருவாள். பெருக்கும் ஸமயத்தில் அவளுக்கு என்னுடைய நூபுரம் கட்டாயம் கிடைத்திருக்கும். அவளிடம் சென்று அதை வாங்கி வாருங்கள்'' என்று பணித்தாள்.

பூல்பாபா தனது ஸமாதி அவஸ்தையில் ஸகிரூபத்தில் ஸோஹினி ஸேவை செய்யும் ஸமயம் தனக்கு ராதாராணியின் நூபுரம் கிடைத்ததைக் கண்டார். மற்ற தோழிகள் தன்னிடம் ராதையின் நூபுரத்தைக் கேட்டுக்கொண்டு வருவார்கள் என நினைத்தார். அது போலவே தோழிகள் வந்து பூல்ஸகியிடம் ''உங்களுக்கு ஸோஹனி ஸேவை செய்யும்பொழுது நூபுரம் கிடைத்ததா'' என வினவினார்கள்.

பூல்ஸகி, (பூல்பாபா) ''நூபுரம் கிடைத்தது. ஆனால், ச்யாமாவினுடையதா அல்லது ச்யாமினுடையதா என்று எனக்கு

எப்படித் தெரியும்? இருவரது சரணத்தில் நானே வைத்துப் பார்த்துதான் முடிவு செய்ய வேண்டும். பிறகு நூபுரத்தை யாருக்கு சரியாக உள்ளதோ அவர்களுக்குத் தந்து விடுவேன்' என்றார். ராதா தேவியிடம் தோழிகள் இந்த விஷயத்தைத் தெரியப்படுத்தியதும் பூல்ஸகியைத் தன்னிடம் அழைத்து வரச் சொல்லி, பூல்ஸகியிடம் ''பாரடி! நூபுரத்தைத் தொலைத்தது நான்தான். ச்யாம் இல்லை. நூபுரத்தைத் தந்துவிடு'' என்றாள்.

பூல்ஸகி தனது அடத்தை விடுவதாக இல்லை. அப்பொழுது ச்யாமும், ச்யாமாவும் தங்கள் தங்கள் சரணங்களை அவள் முன் நீட்டினர்! பூல்ஸகிக்கு ஜன்ம ஜன்மாந்த்ர ஸாதனை பலன் கிடைத்து விட்டதே! நீலத்தாமரையும் சிவப்புத் தாமரையுமான இரு சரணங்களின் ப்ராப்தி அவளை **பா**வ ஸமுத்ரத்தில் ஆழ்த்தியது. ப்ரேமை மேலீட்டால் அந்த இரண்டு சரண கமலங்களில் கண்ணீரால் திருமஞ்சனம் செய்தாள். தனது ப்ராணனை புஷ்பமாக அர்ச்சனை செய்தாள். நூபுரத்தை ராதையிடம் தந்தாள். மனதையும் ப்ராணனையும், யுகளத்திடம் ஸமர்ப்பித்தாள்.

**பா**வஸமாதி கலைந்தது. எதிரில் ராதையும் காணோம். கண்ணனையும் காணோம்! அவ்வளவுதான், அவரது விரஹாக்னி கோரரூபமாய் வளர்ந்தது. ஹா ராதே! ஹா க்ருஷ்ணா! என்று கதறிக் கொண்டு கண்ணீர் பெருக்கிக்கொண்டு இங்கும் அங்கும் அலைந்தாள். சில ஸமயம், கண்ணனின் குழலோசையைக் கேட்பாள். சில ஸமயம் ராஸலீலையை தர்சனம் செய்வாள். இருவரும் சேர்ந்து சில ஸமயம் தர்சனம் தந்துவிட்டு மறைந்து விடுவார்கள். இப்படிக் கண்ணாமூச்சி விளையாட்டு விளையாடிக்கொண்டிருந்தனர் ராதையும் கண்ணனும் அவளிடம்!

பூல்பாபாவின் ப்ராக்ருத சரீரம் இந்த உயர்ந்த பகவத் அனுபவங்களை தாங்கும் சக்தியை இழந்தது. அவரது 24-வது வயதிலேயே அவருக்கு ஒருநாள் ஜுரம் ஆரம்பித்தது. ப்ரபு தனது நித்ய லீலையில் தன்னை சேர்த்துக் கொள்ளப் போகிறான் என்று அவருக்குத் தெரிந்துவிட்டது. ஸேவாகுஞ்சத்திலிருந்து ரஜஸ்ஸைக்

கொண்டு வரச் சொல்லி பாங்கேவிஹாரியின் தோட்டத்தில் ஒரு படுக்கை போல் அமைத்துக்கொண்டு அதில் படுத்துக்கொண்டார். அவருடைய ஸேவகர்கள் ''ஹரேராம'' மஹாமந்த்ர கீர்த்தனம் செய்தனர். பாங்கேவிஹாரியே அவரை நேரில் வந்து அழைத்துக் கொண்டான்! கண்ணனிடம் உள்ள ப்ரேமையால் பூக்களைத் திருடி புஷ்ப கைங்கர்யம் செய்தே பூல்பாபா பாங்கேவிஹாரியிடம் நித்ய லீலா வைபவத்தில் கலந்துவிட்டார்.

**– ஜயந்தி ஜானகிராமன்**

# தமிழக திருக்கோயில்களில் ஒரு கால பூஜை - 3

தமிழக அரசின் இந்து சமய அறநிலைய ஆட்சித்துறையின் கீழ்வரும், நலிவுற்ற திருக்கோயில்களின் ஒருகால பூஜை வைப்பு நிதி திட்டத்தின்கீழ் நமது ஸ்வாமிகளின் அறக்கட்டளைகளின் சார்பாக நிதியுதவி அளிக்கப்பட்ட 100 கோயில்களின் விவரம் (சென்ற இதழ்களின் தொடர்ச்சி)

**அம்மன் திருக்கோயில்கள்**

1. அருள்மிகு குடிகாத்த மாரியம்மன் திருக்கோயில், வளையப்பேட்டை, கும்பகோணம் வட்டம்
2. அருள்மிகு பூண்டியம்மாள் திருக்கோயில், பெருமாண்டி, கும்பகோணம் வட்டம்
3. அருள்மிகு மாரியம்மன் மற்றும் காளியம்மன் திருக்கோயில், ஸ்வாமிமலை, கும்பகோணம் வட்டம்
4. அருள்மிகு த்ரௌபதியம்மன் திருக்கோயில், கும்பகோணம் வட்டம்
5. அருள்மிகு மாரியம்மன் திருக்கோயில், திருப்புறம்பியல், கும்பகோணம் வட்டம்
6. அருள்மிகு மாரியம்மன் திருக்கோயில், இன்னம்பூர், கும்பகோணம் வட்டம்

7. அருள்மிகு மாரியம்மன் திருக்கோயில், வார்வாங்கரை, கும்பகோணம் வட்டம்
8. அருள்மிகு கோடியம்மன் மற்றும் தட்சிணாமூர்த்தி திருக்கோயில், கும்பகோணம் வட்டம்
9. அருள்மிகு எல்லையம்மன் திருக்கோயில், வேப்பத்தூர், திருவிடைமருதூர் வட்டம்
10. அருள்மிகு பொன்முத்து மாரியம்மன் திருக்கோயில், பொட்டங்காடு, திருவிடைமருதூர் வட்டம்
11. அருள்மிகு த்ரௌபதியம்மன் திருக்கோயில், பாஸ்கராஜபுரம், திருவிடைமருதூர் வட்டம்
12. அருள்மிகு நாகம்பாடி காளியம்மன் திருக்கோயில், நாகம்பாடி, மயிலாடுதுறை வட்டம்
13. அருள்மிகு பிடாரி மற்றும் அய்யனார் திருக்கோயில், செம்பியங்கோயில், மயிலாடுதுறை வட்டம்
14. அருள்மிகு த்ரௌபதியம்மன் திருக்கோயில், ஆத்தூர், மயிலாடுதுறை வட்டம்
15. அருள்மிகு மாரியம்மன் திருக்கோயில், மணல்மேடு, மயிலாடுதுறை வட்டம்
16. அருள்மிகு காளியம்மன் திருக்கோயில், அசிக்காடு, மயிலாடுதுறை வட்டம்
17. அருள்மிகு பிடாரி திருக்கோயில், மொழையூர், மயிலாடுதுறை வட்டம்
18. அருள்மிகு மாரியம்மன் திருக்கோயில், கடவாசல், சீர்காழி வட்டம்
19. அருள்மிகு கன்னிகாபரமேஸ்வரியம்மன் திருக்கோயில், செம்மங்குடி, சீர்காழி வட்டம்
20. அருள்மிகு மாரியம்மன் திருக்கோயில், மாகாணம், சீர்காழி வட்டம்
21. அருள்மிகு கன்னிகாபரமேஶ்வரியம்மா திருக்கோயில், இராதாநல்லூர், சீர்காழி வட்டம்

### அய்யனார் திருக்கோயில்கள்

1. அருள்மிகு அய்யனார் திருக்கோயில், தேவனாஞ்சேரி, கும்பகோணம் வட்டம்
2. அருள்மிகு வாழ்முனீஸ்வரர் திருக்கோயில், செம்மங்குடி, கும்பகோணம் வட்டம்
3. அருள்மிகு முனியப்பன் திருக்கோயில், திருமாந்துறை, திருவிடைமருதூர் வட்டம்
4. அருள்மிகு அய்யனார், பிடாரியம்மன் திருக்கோயில், த்ரௌபதியம்மன், சேங்கனூர், திருவிடைமருதூர் வட்டம்
5. அருள்மிகு நாகம்பாடி அய்யனார் திருக்கோயில், மேலப்பருத்திக்குடி, மயிலாடுதுறை வட்டம்
6. அருள்மிகு கங்சமுடையார் திருக்கோயில், மேலப்பருத்திக்குடி, மயிலாடுதுறை வட்டம்
7. அருள்மிகு நல்லசிவகர அய்யனார் திருக்கோயில், காவாளமேடு, மயிலாடுதுறை வட்டம்
8. அருள்மிகு மன்னார்சாமி திருக்கோயில், மங்கில் தோட்டம், மயிலாடுதுறை வட்டம்
9. அருள்மிகு அய்யனார் திருக்கோயில், வடமணல், சீர்காழி வட்டம்
10. அருள்மிகு அய்யனார் வீரனார் திருக்கோயில், நெம்மேலி, சீர்காழி வட்டம்
11. அருள்மிகு ஆஞ்சநேயர் திருக்கோயில், நல்லூர் கும்பகோணம் வட்டம்

---

அதர்வண வேதத்தில் தண்ணீரைப்பற்றி ஒரு இடத்தில் குறிப்பிடும் பொழுது ''ப்ராணன் ஏகம் அன்யத்வே'' என்று வருகின்றது. அதாவது ஒரு பங்கு ப்ராணனும் (அதாவது பிராணவாயுவும்) மற்றது இரண்டு பங்கும் சேர்ந்ததுதான் நீர் என்று வருகின்றது. இதையேதான் நம்முடைய நவீன ரசாயனத்தில் $H_2O$ என்கின்றோம். (Oxygen 1 + Hydrogen2)

# ஸ்ரீஸ்வாமிகளின் ஸம்பாஷணைகளிலிருந்து - 84

*தத்துவந்தெரியா தத்தனை யுற்றாய்*
*தத்துவமிதுவென் அருணாசலா*

'தத்துவந் தெரியா அத்தனை உற்றாய்' என்றால் எந்த ஒரு விதமான தத்துவமும் தெரிந்து கொள்ளாமல் நீ உயர்ந்த நிலையை அடைந்து விட்டாய் என்று பொருள்படும். இதையே வேறு விதமாகப் பிரிக்கலாம்.

'தத்துவந்தெரியா தத்தனை உற்றாய்' - தத்தன் என்பதற்கு தமிழில் தத்தகன் என்று பொருள். தத்தகன் என்றால் (Adopted Son) ஸ்வீகார புத்திரன் என்று அர்த்தம். (தடுத்து ஆட்கொள்ளப்பட்ட குழந்தை என்று கொள்ளலாம்).

இங்கு தடுத்து ஆட்கொள்ளப்பட்ட குழந்தை பகவான் ரமண மஹரிஷிகள்தான்.

திருச்சுழியில் இருந்த ரமண மஹரிஷிகளை தடுத்து ஆட்கொண்டு திருவண்ணாமலைக்கு கூட்டி வந்தது அருணாசலேஶ்வரன். ஆதலால், அருணாசலேஶ்வரனுக்கு ரமணர் ஸ்வீகாரப் புத்திரன். ரமண மஹரிஷிகள் தடுத்து ஆட்கொள்ளப்படும் வரையில் எந்தவிதமான தத்துவ புத்தகங்களையும் படித்ததில்லை. யாரையும் அவர் வாழ்நாளில் குருவாக கொண்டதில்லை. அவர் யாரிடமிருந்தும் எந்த தத்துவங்களையும் கேட்டு தெரிந்து கொண்டதும் கிடையாது. அவர் எந்த ஸம்ப்ரதாயத்தையும், மார்க்கத்தையும் (Philosophy) சேர்ந்தவரில்லை. அப்படிப்பட்ட ரமணமஹரிஷிகளை அருணாசலேஶ்வரன் தடுத்து ஆட்கொண்டு வந்து, பரிபூரணமான தத்துவம் எதுவோ, அதை அனுபவத்தில் கொடுத்து உள்ளான்.

ரமண மஹரிஷிகள் பிற்காலத்தில் எழுதிய நூல்களை எல்லாம் படித்துவிட்டு, பலர் அவரிடம், ''நீங்கள் சொல்வது சங்கரர் சொல்வது போலவே இருக்கிறதே'' என்று கேட்டார்கள். அதற்கு

ரமணர், ''சங்கரர் என்ன சொல்லி இருக்கார் என்று எனக்குத் தெரியாது. நான் எனது அனுபவத்தை எல்லாம் நூலாக எழுதினேன். அதை சாஸ்திரம் படித்து, விஷயம் அறிந்தவர்கள், படித்துவிட்டு, இது சங்கரர் சொல்வதோடு ஒத்துப்போகிறது என்று சொல்கின்றனர். இதுதான் எனக்குத் தெரியும். என்னைப் பொறுத்தவரை நான் என் அனுபவத்தைத்தான் சொல்கிறேன்'' என்றார்.

'தத்துவந் தெரியா தத்தனை உற்றாய்' - 'அருணாசலேஸ்வரா!' நான் எந்த ஸம்ப்ரதாயத்திலும் வரவில்லை. எந்த தத்துவமும் படிக்கவில்லை. ஒரு தத்துவமும் தெரியாத என்னை தடுத்து ஆட்கொண்டு வந்துள்ளாய். 'தத்துவமிதுவென் அருணாசலா' - எனக்கு நீ, எது சரியான தத்துவமோ அதை அனுக்ரஹம் செய்துவிடு. தத்துவத்தை அனுக்ரஹம் செய் என்றால், தத்துவம் என்னவென்று சொல்வது மட்டுமில்லை. புரிய வைப்பது மட்டும் போதாது. இதுதான் தத்துவம் என்று உணர்த்தாமல், அதை அனுபவத்தில் கொடுத்து அருளவேண்டும் என்று ரமண மஹரிஷிகள் அருணாசலேஸ்வரனிடம் ப்ரார்த்திக்கிறார்.

(தொடரும்)

''நமே பக்த: ப்ரணஷ்யதி'' : அதாவது, ''என்னுடைய பக்தன் ஒருக்காலும் வீணாவதில்லை'' என்று கீதையில் பகவான் கூறுகின்றான். இதற்கு போதேந்திர ஸ்வாமிகள் பாஷ்யம் செய்யும் பொழுது ''நாரதர், ப்ரஹ்லாதன், அம்பரீஷன் போன்ற பக்தர்களுக்கு ஸத்கதி கிடைக்குமா? கிடைக்காதா? அவர்களுடைய பக்தி வீணாகிவிடுமா? என்ற சந்தேகங்கள் யாருக்கும் வரப்போவதில்லை. காரணம் என்ன என்றால் அவர்கள் மஹாபக்தர்கள். அப்படியிருக்க, பகவான் எதற்காக இந்த வார்த்தையைச் சொல்கின்றான் என்றால் என்னிடம் அல்பபக்தி, மந்த பக்தி செய்பவர்கள் கூட வீணாவதில்லை என்பதை உறுதி செய்வதற்காகத்தான் என்று பாஷ்யம் செய்கின்றார்.

# செய்திகள்

### ஆகஸ்ட் 11-ந் தேதி— ஆடிப்பூரம்

சென்னை ப்ரேமிகபவனத்தில், ஸ்ரீ ஸ்வாமிகள் முன்னிலையில் ஆண்டாள் திருக்கல்யாணம் நடைபெற்றது.

### ஆகஸ்ட் 12-ந் தேதி

கும்பகோணம், அமரேந்திபுரம் ஸ்ரீ ராமசந்திரதீர்த்தர் மூல ப்ருந்தாவனம், ஸ்ரீ பசுபதிநாதர் திருக்கோயில், ஸ்ரீ வரதராஜபெருமாள் திருக்கோயில்களின் மண்டலாபிஷேக பூர்த்தியை ஒட்டி நடைபெற்ற சிறப்பு ஆராதனை வைபவங்களில், ஸ்ரீ ஸ்வாமிகள் கலந்து கொண்டார்கள்.

### ஆகஸ்ட் 12-ந் தேதி முதல் 18-ந் தேதி வரை

சென்னை ஆழ்வார்பேட்டை, வீனஸ்காலனி ஆஸ்திக ஸமாஜத்தில் கோகுலாஷ்டமி மஹோத்ஸவத்தை ஒட்டி ஸ்ரீ ஸ்வாமிகள் ''பக்த விஜயம்'' பற்றி உபன்யாஸம் செய்தார்கள்.

### ஆகஸ்ட் 19-ந் தேதி முதல் 22-ந் தேதி வரை

சென்னை ப்ரேமிகபவனத்தில் சேங்காலிபுரம் ப்ரஹ்மஸ்ரீ தாமோதர தீக்ஷிதர் அவர்கள் ''சுந்தரகாண்டம்'' பற்றி உபன்யாஸம் செய்தார்கள்.

### ஆகஸ்ட் 30-ந் தேதி முதல்

மதுரபுரி ஆஸ்ரமத்தில் மாதுரிஸகீ ஸமேத ஸ்ரீ ப்ரேமிகவரதனின் ஒன்பதாவது வருட ப்ரஹ்மோத்ஸவம் ஆரம்பமாகியது.

*With Best Compliments from*

**Viswadevi Engg. Enterprises**

14, Jayammal Street, Teynampet, Chennai - 600 018.

Authorised Service Dealer for Cummins Diesel Sales and Service (India) Ltd.

Ph. No. : 4321692, 434487 Fax No. : 91-44-4344875

Grams : "SHANKIRCUM" e-mail : vupusaki@md2.vsnl.net.in

ஸ்ரீ ஹரி:

## மதுரமுரளி வருட சந்தா 2002-2003

''மதுரமுரளி'' தெய்வீக மாதப்பத்திரிகை ஆரம்பித்து ஜூன் 2002-ல் ஏழு வருடங்கள் பூர்த்தியாகின்றது. சந்தாதாரர்கள், ''மதுரமுரளி'' 2002-2003க்கான சந்தாவை ''குருஜி ஸ்ரீ முரளீதர ஸ்வாமிகள் மிஷன்'' என்னும் பெயரில் மட்டுமே, ரொக்கம் / M.O. / DD யாக தங்கள் பெயர், முகவரி, சந்தா எண். தொலைபேசி எண். உள்ளிட்ட விவரங்களுடன் மிஷன் முகவரிக்கு உடனே அனுப்பி வைக்க வேண்டுகிறோம். தயவுசெய்து காசோலையாக சந்தாவை அனுப்ப வேண்டாம்.

உள்நாடு : ஆண்டு சந்தா ரூ. 60/-
மூன்றாண்டு சந்தா ரூ. 180/-
ஆயுள் சந்தா ரூ. 750/-

வெளிநாடு : ஆண்டு சந்தா ரூ. 300/-

மணியார்டர் மூலம் சந்தா அனுப்புபவர்கள் தங்களது விவரங்களை Space for Communication என்ற இடத்தில் கட்டாயம் எழுதும்படி கேட்டுக் கொள்கிறோம். யாரிடமிருந்து சந்தா வந்துள்ளது என்று தெரிந்தால்தான் மதுரமுரளியை அவர்களுக்கு அனுப்ப முடியும். அதுபோல் முகவரியில் மாறுதல் இருக்குமானால் அதையும் உடனுக்குடன் மிஷனுக்கு எழுதி அனுப்பும்படி கேட்டுக் கொள்கிறோம்.

***ஹரே ராம ஹரே ராம***
***ராம ராம ஹரே ஹரே ।***
***ஹரே க்ருஷ்ண ஹரே க்ருஷ்ண***
***க்ருஷ்ண க்ருஷ்ண ஹரே ஹரே ॥***

ஸ்ரீ ஹரி:

## ''குருஜி ஸ்ரீ முரளீதர ஸ்வாமிகள் மிஷன்''

### மதுரமுரளி வருட சந்தா

''மதுரமுரளி'' மாத இதழுக்கான தங்களுடைய வருடசந்தா ________________ முடிவடைந்துள்ளது.

சந்தாவை மிஷன் முகவரிக்கு உடனே அனுப்பி வைக்க வேண்டுகிறோம்.

''இப்படிவத்தை'' பூர்த்தி செய்து அனுப்பவும்.

சந்தா எண் : ________________

பெயர் : ________________

முகவரி : ________________

________________

________________

________________

பின்கோடு : ________________

தயவுசெய்து சந்தாவை காசோலையாக (Cheque) அனுப்பவேண்டாம். பாங்க் டிராப்ட் (D.D.) மூலம் அனுப்பவும்.

D.D. எண். : ________________

தேதி : ________________

வங்கி பெயர் : ________________

கையொப்பம் : ________________

To cut Here

மதுரமுரளி
Registered as Newspaper in India R. No. 62828 / 95

Regd. No.
TN / Chief PMG / 156 / 2002

Licensed to Post without
prepayment WPP No. 52 / 2002

வேணு : 8 | செப்டம்பர் 2002 | கானம் : 2



30-8-02 அன்று இரவு ஸ்ரீ கிருஷ்ண அவதார கட்டம்

Published by V. Sankaran on behalf of Guruji Sri Muralidhara Swamigal Mission, 24, Netaji Nagar, Jafferkhanpet, Chennai - 600 083. and Printed by Mrs. Sri. Kalaivani of Sri Maruthy Laser Printers, 200 (173), Peters Road, Chennai - 600 014. ✆ : 8522656 / 8524256 Editor : S. Sridhar.
Visit us at www.madhuramurali.org ; e-mail : contact@madhuramurali.org